# NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **GAB Foundation give RM3mln for 16,000 Malaysians** |
| Publication : | **Makkal Osai, Malaysia** |
| Section : | **General News** |
| Page : | **3** |
| Date : | **18 July 2012** |

## ஜிஏபி அற நிறுவனம் தனது சமுதாய நலத் திட்டங்களுக்காக 16,000 மலேசியர்களுக்கு வெ. 30 லட்சத்தை வழங்கியுள்ளது




### நிறுவனத் தலைவர் டான்ஸ்ரீ சாவ் கூறுகிறார்




பெட்டாலிங் ஜெயா, ஜூலை 18—

ஜிஏபி அற நிறுவனம் தனது 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுற்றுச்சூழல், கல்வி, சமூக நலத் திட்டங்களின் மூலம் சுமார் 16 ஆயிரம் மலேசியர்களுக்கு 30 லட்சம் வெள்ளியை அன்பளிப்புச் செய்தது.

தனது சுற்றுச்சூழல் திட்டத்தின் ஓர் அங்கமாக சுங்கைவே ஆற்றை மேம்படுத்துவது ஜிஏபியின் தலையாயப் பணியாக அமைந்தது. மேலும் சுமார் 6 ஆயிரம் ஆரம்பப்பள்ளி மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதிலும் அது பங்கு கொண்டது. 60 சமூக நலத் திட்டங்களையும் அது மேற்கொண்டது.

சமுதாயத்தை உட்படுத்திப் பல்வேறு நலப் பணிகளை மேற்கொள்ள நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம் என ஜிஏபி அற நிறுவனத் தலைவர் டான்ஸ்ரீ சாவ் ஹுவாட் லாய் கூறினார்.

இந்தத் திட்டங்களின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மக்களை நாங்கள் சென்றடைந்துள்ளோம். இதில் பங்குபெற்ற அரசு சார்பற்ற இயக்கங்கள், நிறுவனங்கள், சமூகங்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் அவர்.

கின்னஸ் ஹெங்கர் பெர்ஹாட் நிறுவனத்தின் சமுதாயக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கடந்த 2007ஆம் ஆண்டு இந்த அறநிறுவனம் அமைந்தது.